**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.83/2018** |
| Deposition of witness for | - P.W. 2 |
| Name | - Thiru.Balu |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **17.08.2023**

**2,3 எதிரிகள் ஆஜர்:1,4 வது எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது பேரையூர் தாலுகா பேரையம்பட்டியில்குடியிருந்து வருகிறேன். நான் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.10.2016 ம் தேதி காலை 06.30 மணிக்கு நான் பழையூருக்கு சென்றிருந்தேன். வழக்கம்போல் அந்த ஊரில் உள்ள டீக்கடையில் டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது டீக்கடையில் உள்ள டீக்குடிக்க் வந்தவர்கள் சுந்தரராஜபெருமாள் கோவில் அருகில் கிழமேல் ஓடை அருகே ஒரு பெண் பிணம் புதைக்கப்பட்டுள்ளதாக பேசிக்கொண்டிருந்தார்கள். நானும் பிணம் புதைக்கப்பட்ட இடத்தை போய் பார்த்தேன். அங்கு பிணம் புதைக்கப்பட்டிருந்த இடத்தில்

பிணத்தின் மேல் மண்ணால் மூடப்பட்டு அதன் மேல ்முள் செடிகள் போடப்பட்டிருந்தது. புதைக்கப்ப்ட்டிருந்த பிணத்தின் இடது பக்க கால் விரல்கள் லேசாக வெளியே தெரிந்தது. வலது காலின் மொலிப்பகுதி மேல்பகுதி லேசாக தெரிந்தது. துர்நாற்றம் வீசியது. விஏஓ விற்கு தகவல் சொன்னேன். அங்கு விஏஓ வந்து பார்த்தபோது சிவப்பு கலர் வைலட் கலந்த துணி தெரிந்தது. விஏஓ வந்து பார்த்துவிட்டு அந்த துணியை வைத்து இது ஒரு பெண் பிணம் என்று கண்டறிந்து சொன்னார்கள். அந்த சிவப்பு கலந்த வைலட் கலர் துணி ஏற்கனவே அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தனர். நானும் விஏஓவும் நடந்த விபரங்களை சாப்டுர் காவல் நிலையத்தில் விஏஓ புகாராக எழுதிக்கொடுத்தார். நானும் உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: (1,2,4 எதிரிகள் தரப்பில் 3வது எதிரி தரப்பில் செய்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.</u>**

டீக்கடையில் யார் பேசிக்கொண்டிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அத்திப்பட்டி கிராமத்திற்கு தனி விஏஓ உள்ளார் என்றால் சரியல்ல. பிரேதத்தின் வலது பக்கம் எது இடது பக்கம் எது என்று எனக்கு தெளிவாக தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் இடது வலது பக்கம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளது சரி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நான் மாலை 06.00 மணி வரை இருந்தேன். அங்கு பொதுமக்கள் சுமார் 40 பேர் இருந்தார்கள் அவர்கள் யாரென்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் காவல் நிலையத்தில் காலை 11.00 மணி வரை இருந்தோம். அப்போது என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார் என்றால் சரிதான். அதற்கு பின்னால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை.சம்பவ இடத்திற்கு

போகவில்லை சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் காவல் நிலையத்தில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சா.பொ.1யை மட்டும் வைத்து இறந்த நபர் பெண் என்று அடையாளம் காட்ட இயலாது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.